Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 4 விலை ரூபா 4.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 பெப்ரவரி (18 - 02 - 1991) திங்கட்கிழமை ஓசை: 365

## பரீட்சைகளை நடாத்த கூட்டுப்படை முட்டுக்கட்டை

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்குரிய கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர, சாதாரணதரப் பரீட்சைகளை நடாத்துவதற்குப் பரீட்சைத் திணைக்களம் முனைந்த போதிலும், கூட்டுப்படைகளின் தலைமையலுவலகம் அனுமதி வழங்காமல் இழுத்தடிப்புச் செய்து வருகிறது. மேற்படி பரீட்சைகளை இப்பகுதியில் நடாத்தமுடியுமென்று கல்விப்பணிப்பாளர்கள் பரீட்சைத் திணைக்களத்திற்குத் (4 ஆம் பக்கம் பார்க்க)

# கொண்டச்சியில் புலிகளின் 18 நிமிட அதிரடித் தாக்குதலில் 50 சிறிலங்கா இராணுவம் பலி!

## ஐந்து புலிகள் வீரமரணம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கொண்டச்சி என்ற இடத்தில் நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பதினெட்டுநிமிட அதிரடித் தாக்குதலில் ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். விடுதலைப்புலிகள் தரப்பில் ஐவர் வீரமரணம் அடைந்தனர். புலிகளினால் பெருமளவு நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; மன்னார் மாவட்டத்தில் சிலாவத்துறை இராணுவ முகாமில் இருந்து கயுவத்தை இராணுவ முகாமிற்குக் கால்நடையாக ரோந்துசென்ற நூற்றுக்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் மீது கொண்டச்சியில் வைத்து விடுதலைப் புலிகளால் அதிரடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தாக்குதல் காலை 7 42 முதல் 8.00 மணி வரையிலுமே நீடித்தது. மேற்படி தாக்குதலில் ஐம்பதுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அநேக இராணுவத்தினர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களைத் தூக்கிக்கொண்டு மிகுதியாகவிருந்த இராணுவத்தினர் முகாமிற்கு ஓடிவிட்டனர்.

## இரு மேஜர்கள் உட்பட ஐந்து புலிகள் வீரமரணம்

(மன்னார்)

கொண்டச்சி மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஐந்து போராளிகள் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர். அவர்களின் விபரம் வருமாறு;

மேஜர் ராதாரவி (சி. சிவபாலன் 108, பாரதி வீதி, முழங்காவில், மன்னார்),

மேஜர் சூரி (ந. நகுலேஸ்வரன். 35, கட்சன் வீதி. கிளிநொச்சி), கப்டன் துரைமணி (4ஆம் பக்கம் பார்க்க)

## திருட்டுப்பொருள் பிடிபட்டது

(குருநகர்)

துணிகரமாக வீடு நுழைந்து மேசை லாச்சியில் இருந்த தாலிக் கொடியைத் திருடியவர் நகைக்கடை ஒன்றில் மேற்படி தாலிக்கொடியைக் கொடுத்து மாற்றீடாக நகைகளையும், பணத்தையும் பெற்றுக்கொண்டாராம்:

தாலிக்கொடி திருட்டுச் சம்பந்தமாகப் பத்திரிகையில் செய்தி வந்திருந்ததை அவதானித்த ஒருவர் தாலிக்கொடியைக் களவு கொடுத்தவர்களுக்குத் தகவல் தெரிவித்ததால் உரியவர் தமிழீழ விடுதலைப் புலிகளை நாடி தாலியையும், கொடியையும் மீட்டுக் கொண்டனர்,

இச்சம்பவம் கடந்த 11-ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

குருநகர். மவுண் கார்மேல் வீதியைச் சேர்ந்த ஜெறோம் என்பவரது வீட்டில் தாலியையும், கொடியையும் மர்மமான முறையில் கடந்த 8-ஆம் திகதி களவாடப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (21)

### அழைப்பு

ஈழநாதம் முதலாம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகளில் எமது செய்தியாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றார்கள்.

(ஆ-ர்)

## ஈழநாதம் 1-ஆம் ஆண்டு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கொண்டச்சி என்ற இடத்தில் நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பதிலொட்டிமிட அதிரடித் தாக்குதலில் ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். விடுதலைப்புலிகள் தரப்பில் ஐவர் வீரமரணம் அடைந்தனர். புலிகளினால் பெருமளவு நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; மன்னார் மாவட்டத்தில் சிலாவத்துறை இராணுவ முகாமில் இருந்து கவசவத்தை இராணுவ முகாமிற்குக் கால்நடையாக ரோந்துசென்ற நூற்றுக்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் மீது கொண்டச்சியில் வைத்து விடுதலைப் புலிகளால் அதிரடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தாக்குதல் காலை 7.42 முதல் 8.00மணி வரையிலுமே நீடித்தது. மேற்படி தாக்குதலில் ஐம்பதுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அநேக இராணுவத்தினர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களைத் தூக்கிக்கொண்டு மிகுதியாகவிருந்த இராணுவத்தினர் முகாமிற்கு ஓடிவிட்டனர்.

## இரு மேஜர்கள் உட்பட ஐந்து புலிகள் வீரமரணம்

(மன்னார்)

கொண்டச்சி மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஐந்து போராளிகள் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர். அவர்களின் விபரம் வருமாறு;

மேஜர் ராதாரவி (சி. சிவபாலன் 108, பாரதி வீதி, மூர்வீதிகோவில், மன்னார்), மேஜர் சூரி (ந. நகுலேஸ்வரன், 35, கட்சன் வீதி, கிளிநொச்சி), கப்டன் துரைமணி

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஏ.கே.எல்.எம்.ஜி, மோட்டர் உட்பட நவீன ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டம் சிலாவத்துறைப் பகுதியில் நேற்று அதிகாலை சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் பல இலட்சம் ரூபா பெறுமதியான நவீனரக ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

அவற்றின் விபரம் வருமாறு:

★ ஏ. கே. இலகு இயந்திரத் துப்பாக்கிகள் 3, ரவைக் கூடுகள் 3, ரவைக் கோர்வைகள் 407.

(4ஆம் பக்கம் பார்க்க)

## மணற்பிட்டி முகாம் மீது புலிகள் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மணற்பிட்டி இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டது; புலிகள் தரப்பில் இரண்டு போராளிகள் வீரமரணம் அடைந்துள்ளார்கள்.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் மணற்பிட்டி இராணுவ முகாம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண் அமைக்க முயன்ற இராணுவம் மீது தாக்குதல்

(கிளிநொச்சி)

ஆனையிறவு இராணுவ முகாமில் காவலரண் அமைப்பதற்காக வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது

நேற்றுக்காலை பத்துமணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து இயக்கச்சிப் பக்கமாக காவலரண் அமைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தேசியவிவகாரங்களில் தமிழரை பங்கேற்கச் செய்யவேண்டும்

- என். எம். ஜா

(கொழும்பு)

'சிறிலங்காவின் தேசிய விவகாரங்களில் தமிழர்கள் அதிகளவில் பங்கேற்கும் படி செய்வதற்கு இதுவே சரியான தருணம்'' என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். எம். ஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் பத்திரிகை ஒன்றிற்கு அளித்துள்ள பேட்டியில் என். எம். ஜா இதனைத் தெரிவித்தார். தமிழர்களின் நியாய

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### முந்தன்

(நமது நிருபர்)

முல்லைத்தீவில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்த பதின்மூன்றாந் திகதி நடந்த மோதலில் முந்தன் என்ற போராளி வீர மரணமடைந்துள்ளார்.

### தயானி, மூவேஸ்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மணற்பிட்டி இராணுவமுகாம் மீது கடந்த வியாழக்கிழமை மேற்கொண்ட தாக்குதலில் தயானி (ஆரையம்பதி), மூவேஸ் (சித்தாண்டி) ஆகியோர் வீர மரணமடைந்துள்ளனர்.

இவ் வீர வேங்கைகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (மு)

துணிகரமாக வீடு நுழைந்து மேசை லாச்சியில் இருந்த தாலிக் கொடியைத் திருடியவர் நகைக் கடை ஒன்றில் மேற்படி தாலிக்கொடியைக் கொடுத்து மாற்றீடாக நகைகளையும், பணத்தையும்

தாலிக்கொடி திருட்டுச் சம்பந்தமாகப் பத்திரிகையில் செய்தி வந்திருந்ததை அவதானித்த ஒருவர் தாலிக்கொடியைக் களவு கொடுத்தவர்களுக்குத் தகவல் தெரிவித்ததால் உரியவர் தமிழீழ விடுதலைப் புலிகளை நாடி தாலியையும், கொடியையும் மீட்டுக் கொண்டனர்.

இச்சம்பவம் கடந்த 11-ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

குருநகர். மவுண் கார்மேல் வீதியைச் சேர்ந்த ஜெறோம் என்பவரது வீட்டில் தாலியையும், கொடியையும் மர்மமான முறையில் கடந்த 8-ஆம் திகதி களவாடப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (21)

## அழைப்பு

ஈழநாதம் முதலாம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகளில் எமது செய்தியாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றார்கள்.

(ஆ-ர்)

## ஈழநாதம் 1-ஆம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள்

இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்
காலம்: 19-02-91 செவ்வாய் பி. ப 2 மணி

மங்கல விளக்கேற்றல்
வரவேற்புரை:
தலைமையுரை:

### ஆய்வரங்கம்

தலைவர்: திரு: க. சிவராமலிங்கம்

செய்தி வெளியீட்டுப்பணியில் ஈழநாதம்
பத்திரிகையாளர் திரு. மு பொன்னம்பலம்
ஈழநாதம் எழுதிய ஆசிரியர் தலையங்கங்கள்
அறிவுரையாளர் திரு. ஏ. ஜே. கனகரத்தினா
ஈழநாதம் வெளியிட்ட விவரணக் கட்டுரைகள்
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

### கலையரங்கம்

பஞ்சவீணை -
அண்ணாமலை இசைத்தமிழ்மன்ற மாணவிகள்
செல்வி கொ. ஜானி
செல்வி மூ. சத்தியபாமா
செல்வி வை. அம்பிகை
செல்வி க. சிஹரி
செல்வி எஸ். பாமினி

பக்கவாத்தியம்: கண்ணதாசன் - மிருதங்கம்
வேல்மாறன் - கடம்
சிவராம் - தபேலா

நடனம்: செல்வி கவிதா குகதாசன்
(கர்னாட்டிக் மியூசிக் அக்கடமி, அடையாறு, சென்னை)
1. கீர்த்தனம்
2. ஆண்டாள்

செல்வி விக்னேஸ்வரி சரவணமுத்து
(கலாஷேத்ரா அடையாறு, சென்னை)
1. புஷ்பாஞ்சலி, ஸ்லோகம், அலாரிப்பு
2. பதம்
3. தில்லானா

நட்டுவாங்கம்: திருமதி கிருஷாந்தினி ரவீந்திரன்
பாட்டு: திரு. எஸ். பத்மலிங்கம்
மிருதங்கம்: திரு எஸ் மகேந்திரன்
வயலின்: செல்வி பாக்கியலட்சுமி நடராசா
புல்லாங்குழல்: சி. கண்ணன்
நாடகம்: 'மற்றம்' நெறியாளுகை: சிதம்பரநாதன்
நன்றியுரை:

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

எண்ணெய்க்குளியலுக்கு இயற்கை வளம் கொண்டு தயாரித்த ஒலிவ் ஸ்நானப் பவுடர் பக்கெற் ஒன்றின் விலை ரூ 1.50 மட்டுமே. மில்க்வைற் யாழ்ப்பாணம். (B-2025)

அலிகாக்களும் பங்கசுக்களும்-ஓர் அறிமுகம், தாவரவியல் மாணவர்களின் துணைநூல். ஆக்கம்: கலாநிதி சிவபாலன் Ph.D., B.Sc விலை ரூ 50/- சொற்ப பிரதிகள் மட்டும் உள்ளன. விற்பனையாளர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (B-2027)

**பரீட்சை நூல்**

யாழ் பல்கலைக்கழக லிகிதர்/தொழில் நுட்பவியலாளர் பரீட்சைக்குரிய பொது உளச்சார்பு (12) நூல் எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. ஆக்கியோன் கு. குமாரசாமி M. A (R-1113)

**தவறிவிட்டது**

சொக்கலிங்கம் தீபகாந்தன் 691090566 V இலக்க அடையாள அட்டை 16-2-91 அன்று அரசடிச்சந்திக்கும் தட்டாதெருச்சந்திக்கும் இடையில் கறுப்பு பேசுடன் 1800/- காசுடனும் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் குறிப்பிடும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். க. தம்பையா 122/15 பருத்தித்துறை வீதி 4 ஆம் ஒழுங்கை ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (R-1116)

**சத்துணவின்றி மரணம்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிசுக்கள், கர்ப்பிணிகள் மரணம் அதிகரிக்க நேரிடுகிறது.

இப்பகுதியில் உள்ள கர்ப்பிணிகளுக்கு, சிசுக்களுக்கு போதிய சத்துணவு பாலுணவு இல்லாததால் இவர்கள் மரணித்து வருகின்றனர். இந்நிலை தொடர்ந்தும் நீடித்தால் இவர்களது மரணம் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது.

**நிர்வாகிகள் தெரிவு**

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு சனசமூக நிலைய மாதர் பகுதியின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. ச. சுபத்திரா தலைவராகவும் நா. சுமதி செயலாளராகவும் ப. கலைவாணி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். உபதலைவர், உபசெயலாளருடன் 7 பேர் நிர்வாகசபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## நினைவு கூருகின்றோம்

அன்னையின் மடியில் 16-03 1976

அன்னை மண்ணின் மடியில் 06 09-1990



**வீரவேங்கை கமல்**
**(இராசரத்தினம் ஜீவராசன்)**

இளமைக் கனவுகளை
ஒதுக்கி வைத்துவிட்டு
இழந்த நம் தாயகம்
மீளவும் பெற்றிட
உறுதியாய் உழைத்தீர்!
எதிரிப் படையுடன்
மோதிக் களித்தீர்!
இனியும் நாங்கள்
ஓயுதல் செய்யோம்
இலட்சியம் ஈடேறும்
நாள் வரும் வரை......

(R/1117) -நண்பர்கள்

---

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 11-8-1974

தாயக மண்ணில் 20-11-1990

**இளம்புலி நேசன்**
**(குலசேகரம் முரளிதரன்)**

வில்கொண்டு போர் செய்த வீரத் தமிழ் மரபு
போர் முரசு கொட்டிப் பின் வாங்கியதில்லை!
நேர் கொண்டு எதிரிகளை கலங்கி ஓட வைத்தாய்
கலங்கி அவன் வைத்த பொறி! கண்ணை
உன் உயிரைக் களப்பலி ஆக்கியதோ!
சமுதாய உணர்வற்ற சமுதாயம் இங்கே
ஒரு நேர உணவைக்கூட தியாகம் செய்யவில்லை!
பாலகனாய் நீ இருந்தும் போர்க்களம் விரைந்தாய்
தமிழ்த் தாய் அரவணைக்க கண்துயில்வாய் மகனே!

நீர்வேலி (B-2030)

பெற்றோர் சகோதரர், நண்பர்கள்.

---

முதலாண்டை நிறைவுசெய்யும்
ஈழநாதத்திற்கு
வாழ்த்துக்கள்!

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.

(B-2031)

---



## நினைவு கூருகின்றோம்

## பெப்ரவரி 18

1986ஆம் ஆண்டு தங்கவேலாயுதபுரத்தில் வீரமரணமடைந்த

**ரவிக்குமார்** (ம. புண்ணியமூர்த்தி - தம்பிலுவில்)

1987ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தால் முதூர் பகுதியில் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்ட தேவாலய ஊழியர்கள், குழந்தைகள், பெண்கள் உட்பட 34 பேர்

1988ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட

❋ **கமல்** (ஆ. நல்லதம்பி - தங்கநகர்)

1990ஆம் ஆண்டு விபத்தில் எமைப்பிரிந்த

**ஜெயதாஸ்** (சி. கங்காதரன் - கரவெட்டி)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

எங்கள் நிலத்தில் படிந்த
ஆதிக்கக் கரங்கள்
உங்கள் மீது கோரத்
தாண்டவம் புரிய
நீங்கள் சிந்திய
செங்குருதி... நினைவாய் படிந்தது
இந்த நாளில் மண்ணினை மீட்கும்
தாகம் மேலெழும்.
அந்நியன் அனைத்தையும்
புதைகுழிக்கனுப்ப
வேங்கைகள் தோள்கள் உயரும்.

❋ மேற்குறிப்பிட்ட மாவீரர் கமல் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

(B-2021)

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

---

முதலாண்டை நிறைவு செய்யும்

# ஈழநாதத்திற்கு வாழ்த்துக்கள்!

# நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

**தங்கப் பவுண் நகை வியாபாரம்**

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(B. 2032)

## ❁ சிந்தனைக்கு ❁

உருத்திராட்சப் பூனை, உபதேசம் பண்ணியதாம்;

— தமிழ்ப் பழமொழி


ஈழநாதம்

31, முகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 18 02 1991

தொலைபேசி

ஆசிரியபீடம் 023 - 2837 நிர்வாகபீடம்: 2258

உ. பேணன் 03


# இஸ்ரேலின் ஆலோசனை சாத்தானின் வேதம்

மத்திய கிழக்கில் சமாதானம் ஏற்படவேண்டுமானால் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் ஆட்சியில் இருந்து அகற்றப்பட வேண்டும் என இஸ்ரேல் அறிவித்துள்ளது. மத்திய கிழக்கில் சமாதானம் பற்றிய இஸ்ரேலின் இப்பேச்சானது நகைப்பிற்கிடமானது, அதேவேளை சிந்திக்க வேண்டியதும் ஆகும்.

மத்திய கிழக்கின் சமாதானம் என்பது இன்றைய வளைகுடாப் போரினால் மட்டும் எழுந்ததொரு பிரச்சினை இல்லை. ஏனைய குடியேற்ற நாடுகளில் பிரித்தானிய காலனித்துவம் உருவாக்கி விட்டுச் சென்ற பிரச்சினைகள் பலவற்றில் ஒன்றே மத்திய கிழக்கின் இன்றைய பிரச்சினையாகும்.

வட ஆபிரிக்காவின் மேற்குக் கரையில் இருந்து பாரசீக வளைகுடாவின் கிழக்குப்பகுதி வரையும் பரந்துள்ள அரபிய உலகில் இஸ்ரேல் என்ற ஒரு நாட்டை உருவாக்கி பிரச்சினையை உருவாக்கியவர்களே மேற்குலகத்தவர்களும் யூதர்களும்தான்.

முதலாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் துருக்கி பிரிட்டனால் தோற்கடிக்கப்பட்டதுடன் படிப்படியாக ஆரம்பித்து விரிவடைந்த மத்திய கிழக்குப் பிரச்சினை 1948 இல் இஸ்ரேலின் உருவாக்கத்துடன் என்றுமே தீர்க்கப்பட முடியாத நிலைக்கு இடையிடை வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தது. இஸ்ரேல் ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து மூன்று பெரும் போர்களையும், தொடர்ச்சியான கலவரங்களையும் மத்திய கிழக்கு சந்தித்து விட்டது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உலகிலேயே பதட்டமான பிராந்தியமாக இப்பிராந்தியமே இன்று வரையும் இருந்து வருகின்றது.

மூன்று போர்களின் காரணமாக பாலஸ்தீனியர்களின் நிலங்களை அபகரித்ததோடு அவர்களைத் தமது சொந்த மண்ணில் இருந்து விரட்டியது இஸ்ரேல். மேலும் அண்டை அயல் நாடுகளான ஜோர்டான், சிரியா, லெபனான் நிலப் பரப்புக்களையும் அபகரித்துக் கொண்டது.

இந்த நிலையில், மத்திய கிழக்குப் பிரச்சினைகளின் தனி நாயகனாக இஸ்ரேலே தொடர்ந்து இருந்து வந்துள்ளது. அதேவேளை இப்பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்ட சமாதான முன்முயற்சிகளுக்கும் இஸ்ரேல் தடையாக இருந்து வந்துள்ளது. இதற்கு மேற்குலகம் இஸ்ரேலுக்கு பின்னணியாக ஆதரவாக இருந்தது. எப்பொழுதும் இஸ்ரேலின் நலன்களுக்காக இருந்த அமெரிக்கா இஸ்ரேல் மூலம் நவீன ஆயுதங்களைப் பரீட்சிக்கும் களமாக மத்திய கிழக்கையும் பயன்படுத்தி வந்துள்ளது.

அத்தோடு சர்வதேச ரீதியில் இஸ்ரேலின் பாதுகாவலனாகவும் அமெரிக்கா விளங்கியது. கடந்த கால ஐ.நா. வரலாற்றில் பாலஸ்தீனப் பிரச்சினை தொடர்பாகவே உயர்ந்தளவு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அண்ணளவாக [illegible] தீர்மானங்கள் ஐ.நா. பொதுச் சபையிலும் எண்பதுக்கு மேற்பட்ட தீர்மானங்கள் பாதுகாப்புச் சபையிலும் நிறைவேற்றப்பட்டன. இவை பெரும்பாலானவை இஸ்ரேலின் மீதான கண்டனத் தீர்மானங்களாகும். அதேவேளை இஸ்ரேல் மீது அழுத்தத்தை ஏற்படுத்தும் தீர்மானங்களை அமெரிக்கா வீட்டோ செய்தும் வந்தது.

இந்த நிலையில், மத்திய கிழக்கில் இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் யாவற்றின் உருவாக்கத்திற்கும் இஸ்ரேலின் உருவாக்கமே காரணமாகும் எனவும் இஸ்ரேல் உருவாகாமல் விட்டிருந்தால் மத்திய கிழக்கில் இன்றைய நிலவரம் உருவாகியிருக்காது என உலகம் ஒன்றாய்ப் பேசும் வேளை இஸ்ரேல் மத்திய கிழக்கின் அமைதிக்கு ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் பதவியில் இருந்து விலகுவது ஒன்றே வழி எனக் கூறியிருப்பது சாத்தான் வேதம் ஓதுவது போன்றுள்ளது.

ஆனால், உலகின் அமைதிக்கும், சமாதானத்திற்கும் என உருவாக்கப்பட்ட ஐ.நா. ஸ்தாபனம் போரை ஊக்குவிக்கும் ஒரு ஸ்தாபனமாக மாறிவிட்ட வேளையில், [illegible] இஸ்ரேல் சமாதானத்தைப்பற்றிப் பேசும் போது நாம் கேட்டுத்தான் ஆகவேண்டி இருக்கிறது.

# பதனிடப்பட்ட கடல் உணவுகள்

கடல் எமக்குக் கிடைத்துள்ள பெருவளம் பயன்மிக்கது. எங்கள் உணவுத்தேவையைப் பூர்த்திசெய்ய இந்தக் கடல் உயிர்களே போதும்.

இலங்கையிலே அதிகமாக மீன்பிடிக்கப்படுவது தமிழீழக் கடற் பகுதிகளில் தான். இதனை இலங்கை அரசின் புள்ளி விபரங்களே கூறுகின்றன.

நிலைமை இவ்வாறு இருக்கையில் நாம் ஏன் அவர்களிடம் கையேந்த வேண்டும்? எமது தேவைகளை, எமது வளங்களைக்கொண்டு பூர்த்தி செய்ய, கிடைக்கும் கடலுணவுகளைத் தாராளமாகப் பயன்படுத்தலாம். எல்லாக் காலங்களிலும் கிடைக்காவிடினும், கிடைக்கக்கூடிய காலங்களில் அவற்றினைப் பயன்படுத்த வேண்டியது அவசியமானது ஆகும்.

எமது பகுதியில் கடல் உயிர்களைப் புதிய முறையில் பதனிட்டுப் பாவிக்கும் முறையினை வடமராட்சி மீனவர்கள் கைக்கொண்டு வருகின்றார்கள். அவை நீண்ட காலம் வைத்துப் பாவிக்கக்கூடியவை இவை எப்போதுமே கடலுடன் தொடர்பற்ற பிரதேசங்களில் வாழும்மக்களினால் உணவுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

இந்த வகையில் கடல் உயிர்களான இறால், கணவாய் என்பன இதுவரை பயன்படுத்தாத புதிய முறைகளான ஊறுகாய், கருவாடு என்ற முறைகளில் பதனிடப்படுகின்றன.

பிடிக்கப்படும் பெரிய வகை இறால்கள் அவற்றின் தாடைகள் பிரிக்கப்பட்டு பின் உப்புக்கரைசலில் அவிக்கப்படுகின்றன. அவித்த பின்னர் காயவிடப்பட்டு பைகளில் அடைக்கப்படுகின்றன இதுவேஇறால் கருவாடு ஆகும்.

அவிக்கப்பட்ட இறால்களுக்கு மிளகாய்த்தூள் இட்டு சுவையூட்டப்படுகின்றது; இதுவே இறால் ஊறுகாய் ஆகும். இவற்றை சமைக்காது உடனேயே உணவுடன் சேர்த்து உண்ணலாம். ஊட்டச் சத்துக்கள் அதிகம் உள்ள இது மிகவும் பயன் உள்ள உணவாகும்.

தவிர, கணவாயில், கணவாயின் உள்வீடு, கூந்தல் என்பன நீக்கப்பட்ட பின்னர் துண்டு துண்டுகளாக வெட்டப்படுகின்றன. வெட்டப்பட்ட பின் தாவர எண்ணெயில் அவை பொரிக்கப்படும்: இதற்கு மிளகாய்த்தூள் என்பன கலக்க பதனிடப்பட்ட கணவாய் தயாராகி விடுகின்றது.

தமிழீழ மக்களுக்கு எக்காலத்திலும் சீரான விலையில் இவை கிடைக்க வழி செய்யப்பட்டால் பெரிதும் உபயோகமாக இருக்கும்.

இம் முறைகளை சகல பகுதிகளிலும உள்ள மீனவர்கள் கைக்கொள்ள முற்பட்டால் தமது வருவாயை அதிகரிப்பதோடு எமது உணவுத்தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்தவர்களாகவும் ஆகின்றனர்.

இப்போதும் வேறு பல புதிய கடல் உயிர்கள் பதிய முறைகளில் பதனிட ஆராய்வுகள் நடைபெற்று வருகின்றன.

- தமிழீழ ஆய்வு நிறுவனம்

# நிபந்தனையற்ற ரீதியில் பேச்சு அதுவே ஈராக்கின் கோரிக்கை

## ஐ. நாவில் ஈராக்கிய தூதுவர்

(நியூயோர்க்)

''அமெரிக்கா தலைமையிலான கூட்டணிகள் நிபந்தனை அற்ற வகையில் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்பதுதான் ஈராக்கின் ஒரே நிபந்தனை'' என ஈராக் அறிவித்துள்ளது.

வளைகுடாப் போர் பற்றிய ஐ. நா. சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஐ நாவிற்கான ஈராக்கிய தூதுவர் எர்பரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை என்பதுதான் குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறும் என்ற சமாதான யோசனையில் அடங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறுவது பற்றிய பேச்சு வார்த்தைக்கு முன்னர் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட வேண்டும் என்றும், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண பல மாதங்கள் ஆகக்கூடும் ஆயினும் போர் நிறுத்தம் ஏற்படாமல் ஈராக்கிய துருப்புகள் குவைத்தில் இருந்து வெளியேறாது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை ஐ. நா. தலைமைச் செயலாளர் பெரஸ் டி கொய்யா ஈராக்கின் யோசனை குறித்து கருத்துத் தெரிவிக்கும்போது ''வளைகுடாப் போரை முடிப்பதற்கான ஒரு பணி தொடங்கி விட்டது என்ற ஒரு நம்பிக்கையையாவது ஈராக்கின் சமாதான யோசனை கொடுத்திருக்கிறது'' எனத் தெரிவித்தார்.

அத்துடன் மொஸ்கோவில் ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் தாரிக் அசிஸ் சோவியத் யூனியனுடன் நடத்தும் பேச்சு வார்த்தைகள் முடிவடைந்த பின்னரே ஐ. நா. பாதுகாப்புச் சபை இதுகுறித்து மேற்கொண்டு ஆராயும் என்றும், அதுவரை சபைக் கூட்டம் ஒத்திப்போடப்பட்டுள்ளது என்றும் அறிவித்தார்.

அத்துடன் மொஸ்கோவில் நடைபெறும் பேச்சுக்கள் வளைகுடாப் பிரச்சினை குறித்து முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் குறிப்பிட்டார்.

# புலிகள்உட்பட அனைவருடனும் பேசித் தீர்வு காண வேண்டும்

## தொண்டமான்

(கொழும்பு)

''தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்'' என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறிலங்காவின் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்த பிரேமதாசா முன்வர வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

# யாழ். வைத்தியசாலை நிதியை அரசாங்கம் இழுத்தடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனைக்குக் கடந்த 89, 90ஆம் ஆண்டுகளில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் ஒதுக்கப்பட்டநிதி இதுவரை இந்த வைத்தியசாலைக்கு வழங்கப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

89ஆம் ஆண்டு இவ் வைத்தியசாலைக்கு மூன்று இலட்சம் ரூபாவும் 90ஆம் ஆண்டு ஒரு இலட்சம் ரூபாவும் டன் ஒதுக்கப்பட்டுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி பணம் இவ் வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவ உபகரணம் மற்றும் தளபாட வசதிகளை ஏற்படுத்துவதற்குப் பயன்படுத்தத் தேவைப்படுகின்றது என்று இவ் வைத்தியசாலை நிர்வாகத்தினால் தெரியப்படுத்தப்பட்ட போதிலும் இப்பணத்தை வழங்குவதற்கு கொழும்பில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். (ஈ)

# பொருள்கள் வராததனால் விஸ்தரிப்பு வேலை தாமதம்

தேவையான அனைத்துப் பொருள்களும் கப்பல் மூலம் எடுத்துவரப்படாததினால் யு எஸ். எயிட்டின் விவசாய விஸ்தரிப்புத் திட்ட வேலைகள் கால தாமதமாகின்றன.

மேற்படி திட்ட வேலைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பொருள்களில் ஒரு பகுதி மட்டுமே கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளது. இதனால் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இழுபறி நிலை தோன்றியுள்ளது.

# ஸ்கட் தாக்குதல்

சவூதியின் மீது ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதல் தொடர்ந்து இடம் பெறுகின்றது.

# சமாதான முயற்சிகள்

அடுத்த சில தினங்களில் மாஸ்கோவில் சமாதான முயற்சிகள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும்.

# இடமாற்றம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் புலோலி புற்றளை மகாவித்தியாலய கட்டடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. (25)

அமெரிக்க விமானங்களுக்கு

# இந்தியாவில் எரிபொருள் நிரப்புவது உடன் நிறுத்தப்படுவதாக அறிவிப்பு

(டில்லி)

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளுக்கு எரிபொருள் நிரப்ப இந்திய அரசு மறுப்புத் தெரிவித்து விட்டது என இந்தியப் பிரதமர் சந்திரசேகர் பீகாரில் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்; பல்வேறு அரசியல் கட்சிகளும் இந்த பிரச்சினை குறித்து தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவித்தார். இந்தியாவின் இந்த நிலைப்பாடு பற்றித் தொலைபேசியில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ்ஷிற்கு கூறியதாகவும் தெரிவித்தார்

அமெரிக்க விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புவதை உடன் நிறுத்துமாறும் அல்லது சந்திரசேகரின் அரசிற்கான ஆதரவைத் தாம் மறுபரிசீலனை செய்யவேண்டிவரும் எனவும் நேற்று முன்தினம் இந்திரா காங்கிரஸ் எச்சரித்திருந்தமை தெரிந்ததே.

## 94 வரை சந்திரசேகர் அரசு ஆட்சியில் இருக்கும்

- சுப்பிரமணியம்சுவாமி

94 ஆம் ஆண்டில் ஆட்சிக்காலம் முடிவுறும் வரையில் சந்திரசேகர் அரசு பதவியில் இருக்கும் என்று சட்டத்துறை அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமிகூறியுள்ளார்காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தியுடன் தாமும், மத்திய அரசும் அடிக்கடி தொடர்பு கொண்டு வருவதாகவும் ஆதரவை வாபஸ் பெறும் எண்ணம் அவருக்குச் சிறிதும் இல்லை என்றும் புதுடில்லியில செய்தியாளரிடம் பேசுகையில் அமைச்சர் சுவாமி தெரிவித்தார்.

## வரவு செலவுத்திட்டம் குறித்தே ஜனாதிபதியுடன் பேசினேன்

- ராஜீவ் காந்தி

(டில்லி)

''இந்தியாவில் நடைபெற இருக்கும் பாராளுமன்ற வரவு செலவுத் திட்டத்தில் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் குறித்தும் வளைகுடாப் பிரச்சினை காரணமாக எழுந்துள்ள பொருளாதார நிலைகள் குறித்தும் மட்டுமே ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனுடன் பேச்சுக்கள் நடத்தினேன்''. என இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்

இந்தியப் பிரதமர் சந்திரசேகர் நேபாளம் சென்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, ராஜீவ்காந்தி. ஜனாதிபதி வெங்கட்ராமனை சந்தித்துப் பேசினார் என்ற குற்றச்சாட்டை மறுத்தே ராஜீவ் காந்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்

ஜனாதிபதியுடன் நடாத்தப்படும் பேச்சுகள் குறித்து வர்த்தக அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமி யிடம் தாம் ஏற்கனவே அறிவித்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## வி. பி. சிங், கருணாநிதிக்கு புலிகளுடன் தொடர்பு

- ராஜீவ்காந்தி

வி.பி.சிங் அரசுக்கும், கருணாநிதி தலைமையிலான தமிழக அரசுக்கும் விடுதலைப்புலிகளுடன் நெருக்கமான தொடர்புகள இருந்தன.

இவ்வாறு புதுடில்லியில் பேரணி ஒன்றில் பேசிய இந்தியாவின் முன்னாள் பிரதமர்ராஜீவ்காந்திகூறியுள்ளார்.

புலனாய்வு அமைப்புகள் மூலம் பெறப்பட்ட இரகசியத் தகவல்கள் இவர்கள் மூலம் விடுதலைப்புலிகளுக்கு கிடைத்து வந்ததாகவும ராஜீவ் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

## வீதி விளக்குகள்

இருளில் மூழ்கிக் கிடக்கும் வெகுகளில் இருக்கும் மின்கம்பங்களில் இரவு நோயாளிகள் மோதி விடாமல் இருப்பதற்காக அவற்றில் சந்நிதி முன் பழம்றோட் (மதி வீதியில்) சிறிய விளக்குகளைப் பொருத்தியுள்ளனர். தினமும் சுடர்விடும் இவ் விளக்குகள் சைக்கிள் ஓட்டுநருக்கும் பாதசாரிகளுக்கும் பெரும் பயனளிப்பதாக உள்ளன.

## மக்கள் பூட்டிய சங்கக்கிளை

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை ஜே 86 ஆம் இலக்க ப. நோ. கூ. சங்கக்கடை ஒன்று அண்மையில் பொதுமக்களால் பலவந்தமாகப் பூட்டப்பட்டது.

மேற்படி சங்கத்தின் நிர்வாகக்குழுவினருக்கும், பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து மோதல்களும் ஊழல்களுமே இச்சம்பவத்திற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

காவலரண்

பதற்கு வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் பலத்த சேதங்களுடன் இராணுவத்தினர் பின்வாங்கிச்சென்றனர் சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை. (மு)

மணற்பிட்டி

மீது விடுதலைப்புலிகள் சுமார் மூன்றுமணி நேரமாகத் தாக்குதல் மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலால் இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சேதஎண்ணிக்கை விபரம் எதுவும் தெரியவில்லை. (மு)

இருமேஜர்கள்

(க. தவராசா, 8 ஆம் பாம், செட்டிகுளம், வவுனியா), லெப் ஏகாம்பரம்(மு.மகாலிங்கம், 12 ஆம் கட்டை முருங்கன், மன்னார்)ஞானமுத்து(யோண் பற்றிக் அந்தோனி. பள்ளிமுனை, மன்னார்) ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்

பரீட்சைகளை

தெரிவித்ததைத் தொடர்ந்து பரீட்சைத்திணைக்களம் பரீட்சைகளை நடாத்துவது தொடர்பாக முன்னோடியாக திகதி அறிவித்தது.

ஆனால் கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்திடம் மேற்படி திகதிகளில் இராணுவ மற்றும் வான் தாக்குதல்களை நிறுத்தி வைத்துப் பரீட்சை நடாத்தப்படுவதை உறுதிசெய்யப் பரீட்சைத் திணைக்களம் அனுமதிகோரிய போதிலும்கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் இது குறித்துத் திருப்திகரமான பதில்எதுவும் இதுவரைவழங்கவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது. (க)

## மரண அறிவித்தல்

வேலணை மேற்கு

### திரு. வேலுப்பிள்ளை செல்லத்துரை (இளையதம்பி)

வேலணை மேற்கைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் கடந்த 05-02-91 அன்று மன்னாரில் காலமாகி விட்டார். அவர் காலஞ் சென்ற திருமதி பொன்னம்மா அவர்களின் அன்புக் கணவரும் பாலச்சந்திரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) சிவயோகம் (மன்னார்). இராமச்சந்திரன் (ஜேர்மனி), செல்வநாயகி (டென்மார்க்), கமலநாதன் (ஆசிரியர். மகாவித்தியாலயம், நானாட்டான் மன்னார்) ஆகியோரின் அன்புத்தந்தையும். திருமதி பா. சத்தியலட்சுமி திரு. நவரத்தினம் (யோகம் ஸ்ரோர்ஸ், மன்னார்). திருமதி இ. நிர்மலாதேவி (ஜேர்மனி) திரு சி. கேதாரநாதன் (டென்மார்க்). திருமதி க கலேசனா ஆகியோரின் அன்பு மாமனாரும், ரோகிணி சுபாசினி, நளாயினி, பாலமுரளி, இராஜமுரளி (யாழ்ப்பாணம்) முருகதாஸ் (மன்னார்), பிரியதர்ஷினி, தர்ஷன், சத்திய, நிரஞ்சன் (ஜேர்மனி) பிருந்தா. அருந்தா. அஜந்தா டென்மார்க்) சிவாஸ்கர். சுபாஸ்கர் (தாரந்தலை) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்றையதினம் மன்னாரில் நடைபெற்றன. இதனை மிகுந்த மனத்தாங்கலுடன் அறியத் தருகிறேன்.

தகவல்:

செல்லத்துரை பாலச்சந்திரன்

(மகன்)

வேலணை மேற்கு,
வேலணை - 8

193. அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(R/1120)

## இந்தியா நடுநிலை வேண்டாம்; அறிஞர்கள் கோரிக்கை

(டில்லி)

வளைகுடாப் போரில் இந்திய அரசாங்கம் நடுவுநிலையை கடைப்பிடிக்க வேண்டாம் என 150க்கும் கூடுதலான அறிஞர்கள் கோரியுள்ளார்கள்

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் இழைக்கும் போர்க் குற்றங்களைக் கவனிக்காது விட்டாலும் அவற்றை மன்னிக்கும் குற்றத்தை அரசாங்கம் செய்திருக்கிறது என்று இவர்கள் குற்றஞ்சாட்டி இருக்கிறார்கள்.

நிகால சக்கரவர்த்தி. ரஜனி கோத்தாரி, மாதவன்குட்டி, ஓய்வுபெற்ற நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர் உட்பட 150 பேர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்கள்.

## தாரிக் அஸீஸின் விமானம் சுடப்படும் அபாயம் உண்டு

(றியாட்)

ஈராக்கிய வெளியுறவுத்துறை அமைச்சர் தாரிக் அஸீஸ் பாக்தாதில் இருந்து செல்லும் விமானம் சுட்டு வீழ்த்தப்படும் அபாயம் இருப்பதாக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் எச்சரித்துள்ளன.

ஈராக்கில் இருந்து புறப்படும் எந்த விமானத்தையும சுட்டு வீழ்த்த வேண்டாம் என அமெரிக்க விமானப் படைக்கு உத்தரவு எதுவும் விடப்படவில்லை என்று பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பயணிகள் விமானங்கள் கூட்டுப்படையின் இலக்கு இல்லையென்றாலும் விபத்து நேரிடும் ஆபத்து இருக்கின்றதென்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

## குவைத்திலிருந்து வெளியேற கோர்பசேவ் வற்புறுத்துவார்

- ஜோர்ஜ் புஷ்

(வாஷிங்டன்)

''குவைத்தில் இருந்து ஈராக் விலகவேண்டும் என ஈராக்கிய வெளியுறவுத்துறை அமைச்சரை சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் வற்புறுத்துவார்'' என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்தத் தகவலை வெளியிட்ட ஜோர்ஜ் புஷ் மொஸ்கோ சென்றுள்ள தாரிக்அஸீஸிடம் குவைத்தில் இருந்து விலக வேண்டும் என கொர்பசேவ் வற்புறுத்துவார் என்று, தமக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு வளைகுடாவில் கூட்டுப்படைக் கூட்டணிக்கு சோவியத் ஆதரவு குறித்துப் புதிய உத்தரவாதங்கள் தம்மிடம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும ஜோர்ஜ்புஷ் அறிவித்தார்.

# 32-ஆம் நாள் போர்

★ அமெரிக்காவின் 30.000 மாலுமிப் படைகள் குவைத்தின் எல்லையில் தரைப் போருக்கு ஆயுத்தமான நிலையில் இருக்கின்றன.

★ தரைத் தாக்குதலுக்கு ஈராக்கும் தயாராக இருப்பதாக ஈராக்கின் இராணுவ அறிக்கை தெரிவித்துள்ளது.

★ மொஸ்கோ பேச்சுவார்த்தைகள் முடிவடையும் வரை தரைத் தாக்குதலை நிறுத்தி வைக்குமாறு சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் விடுத்த வேண்டுகோளை ஜோர்ஜ்புஷ் ஏற்றுள்ளார்.

★ ஈராக்கின் சமாதான யோசனைக்கு அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும்தான் பதில் அளிக்க வேண்டுமென ஈரான் கூறியுள்ளது. இனிமேலும் ஈராக் மீது விமானத் தாக்குதல் நடாத்த அமெரிக்கா காரணம் சொல்ல முடியாது என்றும் ஈரான் கூறியது

★ நேற்று முன்தினம் இடம்பெற்ற சண்டையில் தண்டபோல்ட் விமானங்கள் இரண்டு காணாமல் போய்விட்டதாக அமெரிக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எவ் - 16 ரக யுத்த விமானம் ஒன்று சவூதிப் பாலைவனத்தில் நொருங்கி வீழ்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 76,000 தடவைகள் விமானத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டதாகவும் அவர் ஊர்ஜிதம் செய்தார்.

★ நேசநாட்டுப் படைகள் தரைவழித் தாக்குதலுக்குத் தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

★ பெரும் அழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களை ஈராக் பயன்படுத்துவது நியாயமானது என ஐ நா. சபையின் ஈராக் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய ஆயுதங்கள் தற்பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்படுவது துரதிஷ்டமானது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்

★ ஈராக்கின் தற்காலிக யுத்தநிறுத்தக் கோரிக்கை ஆபத்தானது என அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். யுத்தநிறுத்தத்தைமேற்கொண்டால்சதாம் ஹுசைன் தமது படைபலத்தை அதிகரிப்பதற்கும், கூடுதலான ஆயுதங்களைத் தமது படைகளுக்கு வழங்குவதற்கும் இடமளித்து விடும். இதன் விளைவாக கூடுதலான உயிர்ச் சேதம் அமெரிக்கத் தரப்பில ஏற்பட்டுவிடும எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

ஏ. கே, எல், எம்.

★ ரி 56-2 ரக துப்பாக்கிகள் 30, றவைக்கூடுகள் 84.
★ ரி-81 ரக துப்பாக்கிகள் 10, றவைக்கூடுகள் 32.
★ ரி 56 பட்மொடல் ரக துப்பாக்கிகள் 2.
★ ரி-56-1 ரக துப்பாக்கி 1.
★ 60 எம். எம். மோட்டார்1, எறிகணைகள் 4.
★ 203 ரக கைத் துப்பாக்கி (டொங்கான்) 1.
★ 40 எம் எம். எறிகணை1.
★ ரிமோட் கிரனைட் 1.
★ ஜே.ஆர். கைக்குண்டுகள்17
★ ஐ எம் றவைகள் 9,000
★ தொலைத்தொடர்பு சாதனம் 2.
★ கவசஉடை கோல்சர் 4.
★ ஏ. கே. கோல்சர் 17.

தேசியமான கோரிக்கைகளை இறிலங்கா அரசாங்கம் மறுக்கவில்லை என்பதை அவர்களுக்கு உணர்த்த ஒட்டுமொத்த திட்டமொன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கேட்டுக்கொண்டார்

வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்களின் ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு இல்லை எனவும், ஏனைய தமிழ்க் குழுக்கள் இலங்கையின் ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொண்டதாலும் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு ஒரு இடைக்கால சபையை ஒழுங்குபடுத்தவேண்டுமெனவும் என் எம். ஐ யோசனை தெரிவித்துள்ளார்;

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.